# மாணவர் நலனில் தி.மு.க.!

**க**ல்விதான் சமுதாயத்தை மாற்றும் ஆயுதம். அடிமைப்பட்டு கிடக்கும் சமுதாயத்தை, சுய உணர்வு கொண்டவர்களாக மாற்றும் அந்தப் பேராயுதத்தை கைப்பற்றும்படி முழங்கியவர்களே உலகப் புரட்சியாளர்கள் ஆகினர். அன்றைய அடிமை வீரன் ஸ்பார்டகஸ் தொடங்கி, இன்று நம் மண்ணில் நம் மக்களுக்காக, சுயமரியாதை வீரராக, சமூகநீதி ஆட்சி நாயகராக உழைத்துக் கொண்டிருக்கும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்கிற திராவிட மாடல் நாயகர் வரை பல தனித்துவ தலைமை ஆளுமைகளும் கல்வியின் மகத்துவம் உணர்த்திக் கொண்டே இருக்கின்றனர்.

இந்தியாவில் பெரும்பான்மை மக்கள் குழுவினர், படிக்கவும், பள்ளிக்கூடங்கள் செல்லவும் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஆரியம் உருவாக்கி வைத்திருந்த கட்டுப்பாடுகளை உடைத்து நொறுக்கியது திராவிடச் சிந்தனை புரட்சிதான். 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நீதிக் கட்சி, சுயமரியாதை இயக்கம், பின்னர் திராவிடர் கழகம் என நம் முன்னோடிகள் அதில் பெரும் தாக்கத்தைச் செலுத்தி நம் கையில் கல்வியறிவு எனும் கிடைக்கச் செய்தனர். சுதந்திர இந்தியாவுக்கு பின்னர் நமது கல்வி முன்னேற்றத்தில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்திய கட்சியாகவும், ஆட்சியாகவும் திராவிட முன்னேற்ற கழகம் திகழ்ந்து கொண்டிருப்பதை வரலாறு அறிந்த எவரும் மறுக்க முடியாது.

தமிழ்நாட்டின் கல்வி முன்னேற்றத்திலும், மாணவர் நலனிலும் மிகப் பெரிய அக்கறையுடன், புயல் காற்றில் படகினைப் போல ' பல போராட்டங்களுடன் முன்னகர்த்திக் கொண்டு வந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்தான். அவர், சாமர்த்தியமான மாலுமி.

தொடக்கக் கல்வி முதல் உயர்கல்வி வரை ஏழை அடித்தட்டு மக்களுக்கும் பயன்பட வேண்டும் என, இந்தியாவுக்கே முன்னோடியாக உள்ள திட்டங்களை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தியவர் கலைஞர். கல்விக்கு நிதி ஒதுக்கீடுகளை அதிகப்படுத்தி, மாணவர்களின் வாழ்க்கையை மாற்றியமைத்துள்ளது கழகம்.

**தமிழ்**
**கா.அமுதரசன்**
கழக மாணவரணி
துணைச் செயலாளர்



தொடக்கக் கல்வி கட்டாயமாக்கம், இலவச நூல்கள், சீருடைகள் , மதிய உணவு திட்டத்தை ஊட்டச்சத்து உணவாக்கியது, சமச்சீர் கல்வி என பள்ளிக்கல்வியை பல படிகள் உயர்த்தியவர் நம் தலைவர் கலைஞர்தான்.

பொறியியல் தொழில்நுட்பக் கல்விக்காக அண்ணா பல்கலைக் கழகம் உள்பட பல கல்லூரிகள் நிறுவியது, இந்தியாவுக்கே முன்னோடியாக தகவல் தொழில்நுட்பக் கொள்கை உருவாக்கியது என நம் கலைஞரின் மகத்தான கட்டமைப்புகள் ஏராளம்.

கலைஞர் வழி வந்த நம் அரசு, மாணவர் நலனில் கொண்டிருந்த, கொண்டிருக்கின்ற அக்கறை புள்ளி விவரங்களால் மட்டும் சொல்லிவிடக்கூடியதல்ல. மாணவர்களின் எதிர்காலம் குறித்து இதயபூர்வமாக உணர்ந்த ஒரு தலைவரின் தொலைநோக்கு நம் சமகாலத்தில் பார்க்கலாம்.

**நான் முதல்வனை உருவாக்கிய முதல்வர்**

2021 ஆம் ஆண்டு, கழகம் ஆறாவது முறையாக ஆட்சிக்கு வந்தது. நம் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் பொறுப்பேற்ற அந்த நாட்கள் உலகமே கொரோனா அச்சத்தால் சுருண்டிருந்தது. மாணவர்களின் கற்றலில் பெரும் தேக்கம் ஏற்பட்டிருந்தது. பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பாமல் பிள்ளைகளில் கல்வி பாதிக்கப்படுகிறதே என பெற்றோர் உணர்ந்த நேரத்தில் , 'இல்லம் தேடிக் கல்வி' என பள்ளிக்குச் செல்ல முடியாத மாணவர்களுக்கு நேரடியாக வீட்டிலேயே கல்வி வழங்கும் திட்டத்தை செயல்படுத்தினார்.

உயர்கல்வியில் முன்னிலையில் உள்ள தமிழ்நாட்டில், படித்து முடித்து வெளியில் வரும் மாணவர்கள் நமது அரசு ' பக்கோடா' விற்று பிழைக்கலாம் எனச் சொல்லவில்லை. ஒருவேளை அடிமை எடப்பாடிகள் இருந்திருந்தால் இன்றைக்கும் நம் மாணவர்கள் அந்த நிலையை அடைந்திருக்கலாம். ஆனால், நம் முதலமைச்சர் ' நான் முதல்வன்' என 2022 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கே முன்னோடி திட்டத்தை அறிமுகம் செய்தார்.

உயர் கல்வி - திறன் மேம்பாடு - தொழில்நுட்பம் மென்பொருள் - வேலைவாய்ப்பு என மாணவர்களின் வாழ்க்கைத் திட்டமிடலுடன் உருவாக்கப்பட்ட 'நான் முதல்வன்' திட்டம், இன்று மூன்றாண்டு சாதனைகளை கடந்து செயல்பட்டு வருகிறது.

பல துறைகளோடு இணைக்கப்பட்டுள்ள நான் முதல்வன் திட்டத்தின் கீழ், இன்று 300 க்கும் மேற்பட்ட மாணவர்கள் அயலக உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்துள்ளனர். தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகளில் தமிழ்நாட்டு மாணவர்கள் வெற்றிபெறுவது கடினம் என்பதை உடைத்து இன்று பலரும்வெளி மாநிலங்களிலும் படிக்கச் சென்றுள்ளனர். இந்தச் சாதனைகள் எல்லாம் சத்தமில்லாமல் நடைபெற்று வருகின்றன.

**புதுமைப்பெண் திட்டம்**

புதுமைப் பெண் திட்டத்தின் நோக்கத்தினை நமது அரசு சொல்ல வேண்டுமென்பதில்லை. தேசிய அளவில் பெண்கள் உயர்கல்வி சேர்க்கை குறித்த புள்ளி விவரங்களே திராவிட மாடல் அரசின் பெருமையைச் சொல்லும். இதுவரை புதுமைப்பெண் திட்டத்தில் பயனடைந்துள்ளார் என்றால் அவர்கள் அனைவரும் உயர்கல்வி சென்றுள்ளனர் என்பது பொருளாகும் . ஏனென்றால் புதுமைப் பெண் திட்டத்தின் காரணமாக dropout விகிதம் குறைந்தது.

**தொழில்நுட்பக் கொள்கை**

பொறியியல் கல்வி முடித்த மாணவர்களின் வேலைவாய்ப்பினை உறுதி செய்யும் வகையில், அவர்களுக்கு துறை சார்ந்த திறனை மேம்படுத்தி பல்வேறு முன்னணி நிறுவனங்களில் வேலை பெற்றுள்ளனர். குறிப்பாக, கல்வி நிறுவனங்களிலேயே வேலை உறுதி செய்யப்படும் அளவுக்கு பயிற்றி பெற்று வருகின்றனர்.

இப்போது புதிய திட்டமாக , கல்வி நிறுவனங்களில் இருந்து இடைநின்ற மாணவர்களுக்காக ' வெற்றி நிச்சயம் என புதிய திட்டத்தினை அறிவித்துள்ளது நம் அரசு.

முதல்முதலில் தகவல் தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கி, 'டைடல் பார்க்' என மாணவர்களுக்கு மிகப் பெரிய வாசலை திறந்தவர் நம் கலைஞர். அவரது வழியில் இன்று 10 நகரங்களில் மினி டைடல் பூங்காக்களை உருவாக்கியது நம் மாணவர்களின் நலனில் கொண்டிருக்கும் அக்கறைதானே. .அன்று கலைஞர் கொண்டு வந்த கொள்கையும், இன்று அவர் வழியிலான தளபதி அவர்களின் அரசு தொழில்நுட்ப வளர்ச்சிக்கான அடித்தளமாக திகழ்கின்றன.

"வேலை தேடுபவர்" என்கிற நிலையில் இருந்து "வேலை தேடி வருவது" என்ற நிலை ஏற்பட்டுள்ளனது. குறிப்பாக, கிராமப்புற பகுதிகளிலிருந்து வந்த மாணவர்களும் தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்பாகச் செயல்படுவதற்கு பாதை அமைத்துள்ளது நம் அரசு.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கல்வி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான திட்டங்கள் அனைத்தும் மாணவர்களின் வாழ்க்கையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்றால் மிகையில்லை.

கல்வியை ஒரு சமூக சாதனமாகப் பயன்படுத்தி, சமத்துவம் சமூகநீதி மற்றும் வளர்ச்சியை நோக்கிய பயணம் தமிழகத்தில் தொடர்ந்து விரிந்து செல்கிறது. கலைஞர் அமைத்த அடித்தளத்தில், நம் திராவிட மாடல் நாயகர் மிகப்பெரும் கட்டமைப்பை நிகழ்த்துக் கொண்டிருக்கிறார். அது மாணவர் நலனில் கழகமும், கழக அரசும் கொண்டுள்ள அக்கறை என சொல்லத் தேவையில்லை.



விருதுநகர் வடக்கு மாவட்டம் காரியாபட்டி ஊராட்சி ஒன்றியம் நந்திக்குண்டு கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடையை நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு திறந்து வைத்து விற்பனையை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் கண்ணன், மாவட்டக் கழக பொருளாளர் வேலுச்சாமி, மாவட்ட கவுன்சிலர் தங்க தமிழ்வாணன், ஒன்றிய துணை செயலாளர் குருசாமி, தி.மு.க. நகரச் செயலாளர் செந்தில், நந்திக்குண்டு தி.மு.க. பிரமுகர்கள் பெரியசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பொது விநியோக திட்ட அலுவலர்கள் பங்கேற்றனர்.

### தமிழர்களின் உரிமை – தன்மானம் – மொழியைக் காக்க

# முதல்வர் மு.க.ஸ்டாலின் மீண்டும் முதலமைச்சராக வர பாடுபடுவோம்!

## இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் பேச்சு!

நெல்லை, ஜூலை 29 - தமிழர்களின் உரிமை தன்மானம் மொழியை காக்க திராவிட மாடல் முதலமைச்சர் தளபதி அவர்கள் மீண்டும் முதலமைச்சராக வரவேண்டும் என நெல்லை கிழக்கு மாவட்டம் களக்காட்டில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. முக்கிய நிர்வாகிகள் கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தெரிவித்தார்.

நெல்லை கிழக்கு மாவட்டம் களக்காட்டில் உள்ள திருமண மஹாலில் முக்கிய நிர்வாகிகள் கலந்துரை கூட்டம் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ. பிரபாகரன், மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், மாநகராட்சி துணை மேயர் கே.ஆர். ராஜ், மத்திய மாவட்ட துணைச் செயலாளர் எஸ். வி.சுரேஷ், ஒன்றிய செயலாளர்கள் செல்வக் கருணாநிதி, ராஜன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நெல்லை கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் நம்பி வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் வனத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன் பங்கேற்று தெரிவித்ததாவது.

முதலமைச்சர் தளபதி அவர்கள் ஓயாமல் உழைத்த காரணத்தில் தான் இன்று தமிழகம் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்குகிறது. தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சிதான் சாதனைகளைப் படைத்துள்ளது.95 சதவீதம் மக்கள் ஆதரவு இருந்து வருகிறது.ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற அடிப்படையில் ஜாதி, மதங்களைக் கடந்து தமிழகம் இருந்து வருகிறது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சி முதலமைச்சர் தளபதி தலைமையில் நடைபெற்று வருகிறது.

கலைஞர் அவர்கள் தலைவரைப் பார்த்து உழைப்பு உழைப்பு உழைப்பு என்று கூறி னார்கள். அதன் வழியில் தளபதி அவர்கள் நடந்து இரவு பகல் பாராமல் உழைத்து தமிழ்நாட்டை முன்னேற்ற பாதையில் கொண்டு வந்துள்ளார். பெரியார், அண்ணா, கலைஞர் அவர்கள் கண்ட கனவை திராவிட இயக்கத்தை நாம் வலுப்படுத்த வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 தொகுதிகளிலும் தி.மு.க.கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றது. நெல்லை நாடாளுமன்ற தொகுதியிலும் காங்கிரஸ் கட்சி சார்பில் நிறுத்தப்பட்ட ராபர்ட் புரூஸ் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாகை சூடினார். இதற்கு திராவிட மாடல் அரசின் சாதனை திட்டங்கள் மிகப் பெரிய காரணமாகும். இது போன்று 2026 தேர்தலிலும் தி.மு.க கூட்டணி மாபெரும் வெற்றி பெறும். மீண்டும் முதலமைச்சராக தளபதி அவர்கள் வந்தால் தான் பிற்படுத்தப்பட்டோர் ஒடுக்கப்பட்டோர்கள் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும். எல்லாருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் திராவிட மாடல் ஆட்சி நடந்து வருகிறது. இந்து மக்களுக்கு எதிரான ஆட்சி என சிலர் கூறுகின்றனர். ஆனால் தி.மு.க ஆட்சியில்தான் 3000க்கும் மேற்பட்ட கோவில்களுக்கு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது. கடந்த அ.தி.மு.க ஆட்சி காலத்தில் 1728 கோயில்களுக்கு மட்டுமே குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

திருச்செந்தூர் குடமுழுக்கு விழாவை மிகச் சிறப்பாக திராவிட மாடல் அரசு நடத்தி காட்டியுள்ளது.தான் நம்பர் 1 முதல்வர் என பெயர் எடுப்பதை விட இந்தியாவிலேயே தமிழகம் முதல் மாநிலமாக வர வேண்டும், என்பதற்காகவே முதலமைச்சர் அவர்கள் உழைத்து வருகிறார். தமிழகத்தில் யார் வந்தாலும் ஒட்டு விழுந்து விடும் என நினைக்கிறார்கள் அது நடக்காது. உதய சூரியன் நம் சின்னமாகும். அனைவரும் ஒன்று சேர்ந்து திராவிட இயக்கத்துக்கு துணையாக இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் ஊழல் இல்லாத ஆட்சி நடக்கிறது. மக்கள் தொகை கூடிக் கொண்டே போகிறது. நம் உணர்வுகளை பிரதிபலிக்கும் இயக்கமாக இது உள்ளது.

தமிழர்களின் உரிமை , தன்மானம், மொழி ஆகியவற்றைக் காக்க மீண்டும் தி.மு.க ஆட்சிக்கு வர வேண்டும். திராவிட இயக்கத்திற்கு தளபதி அவர்கள் ஒருவர் தான் தலைவர். மீண்டும் சொல்கிறேன் நம் மொழியை, இனத்தை காக்க ஒன்று சேருவோம். வெற்றி பெறுவோம்.நாம் அனைவரும் தி.மு.க.வின் பக்கம் நிற்கவேண்டும்.

இவ்வாறு அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் தெரிவித்தார்.

நிகழ்வில் மாவட்டப் பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், நகரச் செயலாளர் மணிசூரியன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் வழக்கறிஞரணி ஜெ.செல்வ சூடாமணி, தகவல் தொழில் நுட்ப அணி பிரேம் ஆனந்த்,மேலச்செவல் அரிகிருஷ்ணன், திருக்குறுங்குடி பேரூர் செயலாளர் கசமுத்து, சேரன்மகாதேவி பேரூராட்சி துணைத் தலைவர் பால் மாரி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் இருக்கன் துறை இந்திரா முருகேசன், சிதம்பராபுரம் பேபி முருகன், ஆழ்வாநேரி சீனிதாஸ் உள்பட கழகத்தினர் திரளானோர் கலந்து கொண்டனர்.

# வேலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



வேலூர், ஜூலை 29 - வேலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முக மதுசகி தலைமையில் 31.07.2025வியாழக்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில் வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள்கள் குறித்து விவாதி க்கப்பட உள்ளது. எனவே வேலூர் மாவட்ட தி.மு.க. விற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் ஆகியோர் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்:

1. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாள்
2. 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை மற்றும்
3. கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு வேலூர் மாவட்ட தி.மு.க. செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின்

# புதிய வகை காகிதம் அறிமுகம்! வாடிக்கையாளர் சந்திப்புக் கூட்டம்!

சென்னை, ஜூலை 29 – தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் ஆசியாவில் காகித தயாரிப்பில் ஒரு முன்னணி நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் சுற்றுச்சூழ லுக்கு உகந்த முறைகளில் பல புதுமைகளை பயன்படுத்தி பல்வேறு வகையான காகிதங்களை தயாரித்து வருகிறது.

இந்நிலையில், டிஎன்பிஎல் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் சந்தீப் சாக்சேனா. கூடுதல் தலைமை செயலாளர் , மேம்படுத்தப்பட்ட டிஎன்பிஎல் காப்பியர் காகிதத்தை 21.07.2025 திங்கட்கிழமை அன்று திருச்சியில் வெளியிட்டார். பின்னர் காகிதத் தயாரிப்பில் ஒரு புதிய மயில் கல்லாக அச்சு மற்றும் எழுதுவதற்கான 'VIVID PRINT' (56 GSM) எனும் புதிய வகை காகிதம் 22.07.2025 (செவ்வாய்க்கிழமை) அன்று சிவகாசியில் நடந்த நிகழ்வில் வெளியிடப்பட்டது. மதுரையிலும் 23.07.2025 அன்று புதிய காகித வகைகளை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து, சென்னை, ஹப்லிஸ் ஹோட்டலில், நடைபெற்ற வாடிக்கையாளர்கள் சந்திப்புக் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் முனைவர் சந்தீப் சக்சேனா, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், கூடுதல் தலைமை செயலாளர் ஆற்றிய சிறப்புரை வருமாறு:–

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் டிஎன்பிஎல், கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக, காகிதம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து வகையான தயாரிப்புகளையும் உற்பத்தி செய்து வரும் தனித்துவமான அரசு நிறுவனமாகும். ஒருகாலத்தில், இந்தியாவில் இருந்த பல காகித நிறுவனங்கள் தற்போது செயல்பாட்டில் இல்லை. ஆனால், டிஎன்பிஎல் மட்டும் என்றும் ஒளிரும் நட்சத்திரமாக திகழ்கிறது.

இன்று, 60க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு டிஎன்பிஎல் காகிதங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்பது மிகுந்த பெருமை அளிக்கிறது. அதற்குக் காரணம் டிஎன்பிஎல்லின் உலக தரம். ஆனால், நாளைய சந்தையின் தேவை மாறலாம். அதை உணர நாங்கள் வாடிக்கையாளர்களுடன் நேரடி தொடர்பை வலுப்படுத்த விரும்புகிறோம். வாடிக்கையாளர்களே எங்கள் வியாபாரத்தில் முக்கிய பங்காளிகள். உங்கள் கருத்துகள், குறைகள் மற்றும் ஆலோசனைகள் எங்களுக்கு மிக முக்கியம். அவைதான் எங்களை முன்னேற்றும் சக்தி. எங்கள் தயாரிப்புகள், சந்தைத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் தொடர்ந்து மேம்படுத்தப்பட வேண்டும் என்பதே எங்களின் முழுமையான நோக்கம்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்வில் டிஎன்பிஎல்ன் செயல் இயக்குநர் (இயக்கம்), முதன்மை பொது மேலாளர்கள், பொது மேலாளர்கள். அங்கீகரிக்கப்பட்ட டீலர்கள். வாடிக்கையாளர்கள். அச்சு உரிமையாளர்கள் மற்றும் அனைத்து பிரிவினரும் கலந்து கொண்டனர்.



பண்ருட்டி நகர தி.மு.க. சார்பில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்த்தல் சம்பந்தமாக வார்டு செயலாளர்கள், BDA நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் பண்ருட்டி தட்டாஞ்சாவடி நகர கழக அலுவலகத்தில், பண்ருட்டி நகர மன்றத் தலைவர் நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கையை விரைந்து முடிக்க ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இக்கூட்டத்தில் ராஜா, ஆர்.கே.இராமலிங்கம், பரணி சந்தர், வழக்கறிஞர் நாராயணன், சம்பத், ராஜா, பார்த்திபன், மோகன் மற்றும் வார்டு செயலாளர்கள், நிர்வாகிகள் பூத் டிஜிட்டல் ஏஜென்ட் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பாக நடைபெற்றது.



புதுச்சேரி அரசின் சாலை போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களின் போராட்டத்தை அலட்சியப்படுத்தும் நிர்வாகத்தைக் கண்டித்து, சாலை போக்குவரத்துக் கழக ஒருங்கிணைந்த கூட்டுப் போராட்டக்குழு சார்பில், கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் சாலை போக்குவரத்துக் கழக அலுவலகம் முன்பு தொடங்கியது. இதில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா பங்கேற்று ஆதரவு தெரிவித்து பேசினார். இதில், சட்டமன்ற உறுப்பினர் எல். சம்பத், தி.மு.க. மாநில துணை அமைப்பாளர் ஏ.கே குமார், தொமுச மாநில அமைப்பாளர் அண்ணா அடைக்கலம், தொ.மு.ச. தலைவர் அங்காளன், பி.ஆர்.டி.சி. ஒருங்கிணைந்த போராட்டக் குழு நிர்வாகிகள் வேலையன், ராஜேந்திரன், பாஸ்கரன், முத்துக் குமரப்பன், இளங்கோ, ஜெயசீலன், கார்த்திகேயன், தமிழ்ச்செல்வம், பிரதீஷ்குமார், திருநாவுக்கரசு மற்றும் ஒப்பந்த ஊழியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.